# கருணை - KARUNAI
தமிழ் - ENGLISH

திருவள்ளுவர் ஆண்டு 2048
1st April. 2018
வருட சந்தா ரூ. 50 மட்டும்

கடவுள் நம்பிக்கை,
ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை இதழ்
***Volume : 8 Issue : 3***

**உரிமை மற்றும் பதிப்பாளர்:**
திருமதி. **இராமலெட்சுமி இளங்கோ** M.A.,
செல் : 8778874134

**ஆசிரியர்:**
திரு. **A.G.சந்திரமோகன்**
செல் : 9442038770

**உதவி குழு:-**
திரு. **G.சுப்பிரமணியன்**
செல் : 9842818242
திரு. **M.கண்ணன்** B.L.,
திரு. **S.சசாங்கன்**
திரு **M.ரவிச்சந்திரன்**

**கௌரவ ஆலோசகர்:**
தயவு.திரு. **P.சுப்பாராஜ்** M.A.B.L.
திரு **சாதுசிவராமன்**
திரு **H.தாயுமானசுவாமி** B.L.,

**Place of Publication**
Karunai Sabai Salai Buld,
Grace Hall
34, Poombukar Nagar,
North Extn. Uthangudi,
Madurai-625 107.


## தலையங்கம்

## தைப்பூசத் திருநாள் புதிய நூல் வெளியீட்டு விழா

**2018 தைப்பூசத் திருநாள் மிகச்சிறப்பாக மதுரை கருணை சபை -சாலையில் கொண்டாடப்பட்டது.** காலை திரு அகவல் பாராயணம், மாலை திருமிகு ஏபிஜெ அருள் எழுதிய கருணை சபை-சாலை அறக்கட்டளை வெளியீடான **"வள்ளலார் சுத்த சன்மார்க்கம்"** என்ற நூல் வெளியீட்டு விழா நடைப்பெற்றது.

புதிய நூலை திருமதி **ஜானகி ஆறுமுகம்,** வழக்கறிஞர் அவர்கள் வெளியிட சமூக ஆர்வலர் திரு **பி.பாலசுப்பிரமணியன்** அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருவாளர்கள் **பி.சுப்பாராஜ், எச்.தாயுமானசுவாமி, எம்.கண்ணன், மற்றும் வள்ளுவர் வள்ளார் மன்றம், செயலாளர் சாசங்கன், ஆசிரியர்கள் கண்ணன், குரு மற்றும் நகரபுற நண்பர்கள், அன்பர்கள் பலர் கலந்துக் கொண்டு சிறப்பித்தார்கள்.**

# தனி நெறி - புதிய மார்க்கம்

ஏபிஜெ.அருள்

திருவருட்பிரகாச வள்ளலார் தோற்றுவித்த மார்க்கம் 'சுத்த சன்மார்க்கம்'. இது உலகில் காணும் சமய மத மார்க்கங்களின் கிளையோ பிரிவோ இல்லை. என் மார்க்கம் 'தனி நெறி' கொண்டது என்கிறார் வள்ளலார். ஆம், சுத்த சன்மார்க்கம் 19ம் நூற்றாண்டில் தொடங்கிய ஒரு 'புதிய மார்க்கம்' எனலாம்.

(எனவே, நாம் நம் மார்க்கத்தை ஒரு புதிய மார்க்கம் மற்றும் தனி நெறி எனவும் மேதகு அரசு அறிவிக்க வேணுமாய் நாம் விண்ணப்பிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. சட்டப்படியாகவும் அறவழியிலும் விண்ணப்பித்து வேண்டுவோம். - ஏபிஜெ அருள்.)

எங்ஙனம் வள்ளலாரின் சுத்தசன்மார்க்கத்தை ஒரு புதிய மார்க்கம் மற்றும் தனி நெறி எனச் சொல்ல முடியும்?

அடுத்து, எதற்கு வள்ளலாரின் சுத்தசன்மார்க்கத்தை ஒரு புதிய மார்க்கம் மற்றும் தனி நெறி எனச் சொல்ல வேண்டும்?

இது குறித்து ஆதாரங்களுடன் நல்ல விசாரணை செய்வோம்.

சுத்தசன்மார்க்கத்தை ஒரு புதிய மார்க்கம் மற்றும் தனி நெறி எனச் சொல்ல, கீழ்வரும் மூன்று கேள்வியின் பதிலில், இம்மார்க்கம் தனித்தன்மை பெற்றிருக்க வேண்டும்.

1. சுத்தசன்மார்க்கத்தில் வரும் கடவுள் யார்?
2. அக்கடவுள் அருள் பெறுவதற்கு உள்ள பயிற்சி எது?
3. இம்மார்க்கத்தால் பெறப்படும் பயன் என்ன?

மேலே உள்ள கேள்விகளுக்கு ஒவ்வொன்றாக ஆதாரத்துடன் பார்ப்போம்.

**கேள்வி 1: சுத்தசன்மார்க்கத்தில் வரும் கடவுள் யார்?**

**பதில்: ஆதாரம்: சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம்.**

"எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லா உயிர்களையும், எல்லாப் பொருள்களையும், மற்றையெல்லாவற்றையும் தோற்றுவித்தும், விளக்கஞ் செய்வித்தும், துரிசு நீக்குவித்தும், பக்குவம் வருவித்தும், பலன் தருவித்தும் எங்கும் பூரணராகி விளங்குகின்ற ஓர் உண்மைக்கடவுள் உண்டென்றும், அக்கடவுளை உண்மையன்பாற் கருத்திற் கருதி வழிபாடு செய்யின்....."

நிற்க! இங்கு வள்ளலார் "ஓர் உண்மை கடவுள் உண்டென்றும்.." என்கிறார் என்பதை மிகவும் கவனத்தில் கொள்ள வேண்டும். இங்கு இவரே கடவுள் என்று நம்மை கருதச் சொல்லவில்லை. நம் ஒவ்வொருவரையும், ஓர் உண்மை கடவுள் உண்டென்று, என்று தான் கருத்தில் கருத சொல்லப்பட்டுள்ளது. அக்கடவுளை உண்மை அன்பால் வழிபாடு செய்து, அக அனுபவத்தில் கடவுள் உண்மை காணச் சொல்லும் வழிக்கு பெயரே சுத்த சன்மார்க்கம். மேலும்,

12-04-1871 கடிதத்தில் உள்ள வாக்கியங்கள் இதை உறுதிப் படுத்துகிறது. அதில்

"இப்போது வருகிற நமது கடவுள் இதற்கு முன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக்கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுளர், தேவர், அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல......"

மேலும் பக்கம் 410ல்

சர்வ சித்தியுடைய கடவுள் ஒருவருண்டென்று அவரை உண்மை அன்பால் வழிபாடு செய்து, பூரண சித்தியைப் பெற வேண்டுவது சன்மார்க்கக் கொள்கை. மேலும் தனித்தலைவன் லட்சியம் தவிர அநித்திய சடதுக்காதிகளைப் பொருட்படுத்தி உபாசனாதி மார்க்கமாய் வழிபடுவது கொள்கை யல்ல என்கிறார் வள்ளலார்.

ஆக, சுத்த சன்மார்க்கத்தில் வள்ளலாரால் வெளிப்படுத்திய "கடவுள்" இதுவரை வெளிப்பட்டுள்ள சமய, மத, சாத்திர புராணங்களில் வந்துள்ள கடவுளை, கர்த்தரை, தெய்வத்தை, வேறு எவரையும் குறிப்பிடவில்லை எனத் தெளிவாகிறது. சுத்த சன்மார்க்கத்தில் வரும் கடவுள் "தனிக்கடவுளே".

அடுத்து,

**கேள்வி 2: கடவுள் அருள் பெறுவதற்கு உள்ள பயிற்சி எது?**

**ஆதாரம்: உரை நடைப்பகுதி பக்கம்: 416**

சுத்த சன்மார்க்கத்துக்கு முக்கிய சாதனம் என்னவென்றால்

"எல்லா ஜீவர்களிடத்தும் தயவும்
ஆண்டவரிடத்து அன்புமே"

வேறு சாதனங்கள் ஒன்றும் வேண்டாம். ஏதாவது ஓர் சாதனம் சொல்லக்கேட்டு அதன்படி நடந்தால் சிறு ஒளி உண்டாம். அதைக் கண்டு பல்லிளித்து இறுமாத்து கெட நேரிடும் என்கிறார் வள்ளலார்.

மேலும், மிகத்தெளிவாக கீழ்வருமாறு விண்ணப்பிக்கிறார் வள்ளலார்

"எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடையாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்திற் பற்றாவண்ணம் அருள் செய்தல் வேண்டும்."

ஆக, சுத்த சன்மார்க்கத்தில் எல்லா உயிரையும் தம்முயிர் போல் பாவிக்கின்ற உணர்வும், உண்மை அன்பால் ஆண்டவரை வழிபாடு செய்தலுமே உள்ளது. மற்ற வழிமுறைகள் கூடாது மட்டுமில்லை, அவை எக்காலத்தும் எவ்விதத்தும் முக்கியத் தடையாக அறிவித்துள்ளார் வள்ளலார்.

அடுத்து,

**கேள்வி 3: இம்மார்க்கத்தால் பெறப்படும் பயன் என்ன?**

**ஆதாரம்: சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம்**

"கடவுள் திருவருள் நமது கருத்தின்கண் வெளிப்பட்டு விளங்குமென்றும், அத்திருவருள் விளக்கத்தால் மரணம், பிணி, மூப்பு, பயம்,துன்பம் முதலிய அவத்தைக எல்லாவற்றையும் தவிர்த்து எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவுந் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வை யடைதல் கூடும் "

மேலும், பக்கம்: 411ல்

சுத்த சன்மார்க்கத்தின் முடிபு சாகாத கல்வியைத் தெரிவிப்பதேன்றி வேறில்லை. என் மார்க்கம் இறப்பையொழிக்கும் மார்க்கம் என்கிறார் வள்ளலார்.

மேலும், நான்காவது விண்ணப்பமாகிய சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பத்தில்

"இவ்வுலகினிடத்து ஆறறிவுள்ள உயர் உடைத்தாகிய தேகத்தைப் பெற்ற யான், இத்தேகத்திற்கு இடைக்கிடை நேருகின்ற மரணம், பிணி, மூப்பு, பயம், துன்ப முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் நிவர்த்தி செய்து, இத்தேகத்தையே நித்திய தேகமாக்கிக் கொண்டு எக்காலத்தும். எவ்விடத்தும், எவ்விதத்தும், எத்துணையும் தடைப்படாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தல் வேண்டு மென்பதே எனது சத்தியமான அதிதீவிர விருப்ப முற்சியாக இருக்கின்றது."

ஆக, வள்ளலார் கண்ட சுத்த சன்மார்க்கத்தில்

- கடவுள், தனிப் பெருங்கருணை கடவுள்,
- சாதனம், தனிச் சாதனம்,
- கிடைக்கும் அருள், தனிப் பெரும்பயன்

என உறுதியாகி விட்டது. எனவே வள்ளலாரின் சுத்த சன்மார்க்கம் ஒரு புதிய சன்மார்க்கம் மற்றும் ஒரு தனி நெறி எனலாம்.

இன்னும் விரிவாகப் பார்ப்போம்

## தனி நெறி

திருவருட்பிரகாச வள்ளலார் தனது மார்க்கத்தின் நெறி தனி நெறி என்கிறார்கள். அதே நேரத்தில் இந்நெறி எல்லா சமயங்களுக்கும் எல்லா மதங்களுக்கும் எல்லா மார்க்கங்களுக்கும் உண்மைப் பொது நெறியாகவும் விளங்குகிறது என்கிறார்கள்.

திருவருட்பிரகாச வள்ளலார் சமயத்தில் பற்று வைத்திருந்த காலத்தில் சமய கடவுளை நினைந்து ஸ்தோத்திரங்கள் செய்து பல பாடல்களை பாடி மகிழ்கிறார்கள். சைவ சமயத்தின் புனித நூல்களான திருமந்திரம், திருவாசகத்தை போற்றி வந்தார்கள். "சிவாய நம" மந்திரத்தின் உண்மை விளக்கம் தந்து அருளினார் வள்ளலார். மகான் ஞானசம்பந்தர் அவர்களை குருவாக போற்றினார். திருமந்திரத்தின் சிவத்தை வணங்கி வந்தார்கள். திருவாசகத்தில் மாணிக்கவாசகர் அருளிய அருட்பெருஞ்ஜோதியை துதித்தார்.

ஆனால், தனது முடிபான நெறியில் மேற்படி அனைத்தையும் கடந்து செல்கிறார். அவை மீது இருந்த லட்சியத்தை முற்றிலும் கைவிடுகிறார் வள்ளலார். இதுவே உண்மை.

தனது முடிபான நெறியில் மேற்படி அனைத்திலும் வைத்திருந்த லட்சியத்தை கைவிடுகிறார் வள்ளலார். தனி மகாமந்திரம் காண்கிறார். சுத்த சன்மார்க்கத்தில் ஆண்டவரே வள்ளலாருக்கு குருவாகிறார். வள்ளலாருக்கு கிடைத்தது போல் நாமும் பெறுவதற்கு ஆண்டவரையே குருவாக கொள்ள வேண்டும். தன்னை தெய்வமாக சுற்றிவருபவர்களை கண்டு பரிதாபப்படுவதாக பக்கம் 471ல் சொல்கிறார் வள்ளலார்.

மேலும், வள்ளலார் சமயத்தில் லட்சியம் வைத்திருந்த காலத்திலும், அதன் எந்தவொரு ஆசாரத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல் இருந்தார். அதற்கு அவரின் தோற்றமும், அவரின் அன்றாட நடவடிக்கையும் சாட்சியாக அமைந்துள்ளது. மேலும், அவரே கீழ்வருமாறு பதிவு செய்துள்ளார்கள்

பக்கம்: 570ல்,

அச்சிறுபருவத்திற்றானே ஜாதியாசாரம் ஆசிரம ஆசாரம் என்னும் பொய்யுல காசாரத்தைப் பொய் என்று அறிவித்து அவைகளை யனுட்டியா மற்றடை செய்வித்து அப்பருவம் ஏறுந்தோறும் ஏறுந்தோறும் எனதறிவை விளக்கஞ்செய்து என்னை மேனிலையில் ஏற்றி ஏற்றி நிலைக்கவைத் தருளினீர் என்கிறார்.

மேலும்,

அவ்வாலிபப் பருவந்தோன்றுதற்கு முன்னரே, எல்லா உயிர்கட்கும் இன்பந் தருவதற்கு அகத்தும்புறத்தும் விளங்குகின்ற அருட்பெருஞ்ஜோதி உண்மைக் கடவுள் ஒருவரே உள்ளார் என்றறிகின்ற மெய்யறிவை விளக்குவித் தருளினீர். வாலிபப் பருவம் தோன்றியபோதே சைவம், வைணவம், சமணம், பவுத்த முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த அளவிறந்த சமயங்களும், அச்சமயங்களிற் குறித்த சாதனங்களும் தெய்வங்களும், கதிகளும், தத்துவசித்தி விகற்பங்களென்றும் அவ்வச் சமயங்களில் பலபட விரிந்த வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், சாத்திரங்கள் முதலிய கலைகளெல்லாம் தத்துவ சித்திக் கற்பனைக் கலைகளென்றும், உள்ளபடியே எனக்கு அறிவித்து அச்சமய ஆசாரங்களைச் சிறிதும் அனுட்டியா மற்றடை செய்வித்தருளினீர். அன்றியும் வேதாந்தம், சிந்தாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த மதங்களும் மார்க்கங்களும் சுத்த சன்மார்க்க அனுபவ லேச சித்திப் பேதங்களென்று அறிவித்து அவைகளையும் அனுட்டியாதபடித் தடை செய்வித்தருளினீர்.

அதனால் தான் அவரின் சத்திய அறிவு, சமய,மதங்கள் கடந்து, திருவருட் பெருங்கருணைத் திறத்தை அறிதற்கும் கருதுதற்கும் தொடங்கியது. சமய, மதங்களில் கடவுளின் உண்மை முழுமையாக உரைக்கப்படவில்லை எனவும், இறை உண்மை நிலையை அறிவதற்கு இந்த சாதி, சமய கட்டுப்பாட்டு ஆசாரங்களும், உலகாசாரங்களும் தடையாக உள்ளது என்ற உண்மையை கண்டார்கள்.எனவே, அவற்றின் மீது வைத்திருந்த லட்சியத்தை முற்றிலும் கைவிட்டார் வள்ளலார். இதை உறுதியாக பதிவு செய்கிறார் வள்ளலார். நம்மையும் அவர் போல் விட்டு விட்டால் தான், அவர் பெற்ற ஏறா நிலையை அடைய முடியும் என உறுதிப்பட அறிவிக்கிறார்.

மேலும், பக்கம்: 418ல்

தத்துவவொழுக்கம் பற்றிச் சமயங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. தொழிலொழுக்கம் பற்றி ஜாதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. தயவை விருத்தி செய்வதற்குத் தடையாயிருப்பன சமய ஏற்பாடு ஜாதியேற்பாடு முதலிய கட்டுப்பாட்டு ஆசாரங்கள்.அவையாவன: ஜாதியாசாரம், குலாசாரம், ஆசிரம ஆசாரம், லோகாசாரம், தேசாசாரம், கிரியாசாரம், சமயாசாரம், மதாசாரம், மரபாசாரம்,கலாசாரம், சாதனாசாரம், அந்தாசாரம், சாஸ்திராசாரம் முதலிய ஆசாரங்கள். ஆதலால் மேற்குறித்த ஆசாரங்கள் ஒழிந்து,சுத்தசிவசன்மார்க்க சத்திய ஞான ஆசாரத்தை வழங்கிப் பொது நோக்கம் வந்தால், மேற்படி காருண்யம் விருத்தியாகிக் கடவுளருளைப் பெற்று, அனந்த சித்தி முத்திகளைப் பெறக்கூடுமேயல்லது, இல்லாவிடில் கூடாது என்கிறார்கள்.

ஆக, வள்ளலாரின் சுத்த சன்மார்க்க நெறி ஒரு "தனி நெறியே".

"தனி" என்ற சொல்லை வள்ளலார் தனது முடிபான கொள்கைப் பாடல்களில் நூற்றுக்கணக்கான தடவை பயன்படுத்தி உள்ளார்கள். தனது சுத்த சன்மார்க்க நெறியை "தனி நெறி" என்று கீழ்வரும் பாடல்களில் சொல்லியுள்ளார்கள்.

**பாடல் :-**

**ஆறாம் திருமுறை : திருவருள் விழைதல்**

தருணம்இஞ் ஞான்றே சுத்தசன் மார்க்கத்
  **தனிநெறி** உலகெலாம் தழைப்பக்
கருணையும் சிவமே பொருள்எனக் கருதும்

கருத்தும்உற் றெம்மனோர் களிப்பப்
பொருள்நிறை ஓங்கத் தெருள்நிலை விளங்கப்
புண்ணியம் பொற்புற வயங்க
அருள்நயந் தருள்வாய் திருச்சிற்றம் பலத்தே
அருட்பெருஞ் சோதிஎன் அரசே.

### ஆறாம் திருமுறை : பொதுநடம் புரிகின்ற பொருள்

சிதத்தொளிர் பரமே பரத்தொளிர் பதியேசிவபத அனுபவச் சிவமே
மதத்தடை தவிர்த்த மதிமதி மதியே மதிநிறை அமுதநல் வாய்ப்பே
சதத்திரு நெறியே தனிநெறித் துணையே
சாமியே தந்தையே தாயே
புதப்பெரு வரமே புகற்கருந் தரமே பொதுநடம் புரிகின்ற பொருளே.

மேலும்;

சமய நெறியில் லட்சியம் வையாது தனது பொது நெறியாம், அருள் நெறியாம், ஞான நெறியாம் தனி நெறி சுத்த சன்மார்க்கதில் மட்டுமே லட்சியம் வைக்க வேண்டுமாய் பல நூறு பாடல்கள் பாடியுள்ளார்கள்:

### பாடல் :- ஆறாம் திருமுறை : அருட்கொடைப் புகழ்ச்சி

மதியைக் கெடுத்து மரணம்எனும் வழக்கைப் பெருக்கி இடர்ப்படும்ஓர்
விதியைக் குறித்த சமயநெறி மேவா தென்னைத் தடுத்தருளாம்
பதியைக் கருதிச் சன்மார்க்கப் பயன்பெற் றிடஎன் உட்கலந்தோர்
கதியைக் கொடுத்தாய் நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே.

## புதிய மார்க்கம்

திருவருட்பிரகாச வள்ளலாருக்கு திருவருட் திறத்தால் உண்மை வழியாம் "சுத்த சன்மார்க்கம்" பெரிய சிவ அனுபவத்தால் கிடைக்கப்பெற்றது என்கிறார்.

ஆக, சுத்த சன்மார்க்கம் "பழையது" எனலாம்.

தான் அருளால் கண்ட சுத்த சன்மார்க்கத்திலே தான் இறவாமை உற்றேன் என்பதால் சுத்த சன்மார்க்கம் "சிறப்பது" எனலாம்.

வள்ளலாருக்கு முன்பு இருந்த மார்க்கங்கள் இரண்டே. ஒன்று சமய சன்மார்க்கம் இரண்டாவது மத சன்மார்க்கம் ஆகும். 19ம்

நூற்றாண்டில் திருவருளால் வள்ளலார் கண்டு உலகிற்கு வெளிப்படுத்திய மூன்றாவது மார்க்கமே "சுத்த சன்மார்க்கம்" என்பதால் இதை புதியது எனலாம்.

இவ்வழி எல்லா சமய மத மார்க்கங்களுக்கும் பொதுவாக உள்ளது. ஆதலால்;

"பொதுவது சிறப்பது புதியது பழயதென்
றதுவது வாய்த்திக ழருட்பெருஞ் ஜோதி"

- என்கிறார் வள்ளலார்.

ஆக, இதுவரை உலகில் தோன்றிய சமய, மத, மார்க்க நெறிகளை விட உயரிய சுத்த சன்மார்க்கம் என்னும் தனி நெறியை சார்வீர், சார்ந்து மரணமில்லாப் பெருவாழ்வில் வாழ்வீர்.

இதில் **ஆசை உண்டேல்** வம்மீன் என்கிறார் வள்ளலார்.

வள்ளலார் கண்ட தனி நெறியாகிய சுத்த சன்மார்க்கம் எல்லோருக்கும் வேறுபாடு இன்றி பொது நெறியாக திகழ்கிறது அதே நேரத்தில் இந்த சிவநெறி திருநெறியில் சார "ஆசை வேண்டும்" என்கிறார் வள்ளலார்.

வள்ளலாரின் **தனி நெறி** சுத்த சன்மார்க்கத்தில் உள்ள தனித்தன்மைகள் குறித்து ஆய்ந்து காண்போம்.

## தனிப்பதி

தனது தனி உண்மை பொது நெறியில் வரும் கடவுள் தனிப்பதி என்றும் தனித்தலைமைப்பதி என்றும் அழைக்கிறார் வள்ளலார். 12.04.1871 அறிவிப்பு மடலில்;

"இப்போது வருகிற நமது கடவுள் இதற்கு முன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக்கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுளர், தேவர், அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல. இப்படிச் சொல்லப்பட்ட எல்லாமூர்த்திகளும், எல்லாத் தேவர்களும், எல்லாக் கடவுளரும், எல்லாத் தலைவர்களும், எல்லா யோகிகளும், எல்லா கடவுளரும், எல்லாஞானிகளும் தங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற தனித்தலைமைப் பெரும்பதி"

மேலும், தனது பாடலில் : -

## ஆறாம் திருமுறை / கண்டேன் கனிந்தேன் கலந்தேன் எனல்

பாட்டுவந்து பரிசளித்த பதியைஅருட் பதியைப்பசுபதியைக் கனகசபா பதியைஉமா பதியைத்
தேட்டமிகும் பெரும்பதியைச் சிவபதியை எல்லாம்
செய்யவல்ல தனிப்பதியைத் திகழ்தெய்வப் பதியை
ஆட்டியல்செய் தருள்பரம பதியைநவ பதியை
ஆனந்த நாட்டினுக்கோர் அதிபதியை ஆசைகாட்டிஎனை மணம்புரிந்தென் கைபிடித்த பதியைக்
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே.

## ஆறாம் திருமுறை : நற்றாய் செவிலிக்குக் கூறல்

சத்திய ஞான சபாபதி எனக்கே
        தனிப்பதி ஆயினான் என்றாள்
நித்திய வாழ்வு பெற்றுநான் இன்ப
        நிலைதனில் நிறைந்தனன் என்றாள்
பித்தியல் உலகீர் காண்மினோ சித்திப்
        பேறெலாம் என்வசத் தென்றாள்
எத்திசை யீரும் ஒத்திவண் வருக
        என்றனள் எனதுமெல் லியலே.

## ஆறாம் திருமுறை : மரணமிலாப் பெருவாழ்வு

பணிந்துபணிந் தணிந்தணிந்து பாடுமினோ உலகீர்
பரம்பரமே சிதம்பரமே பராபரமே வரமே
துணிந்துவந்த வேதாந்த சுத்தஅனு பவமே
துரியமுடி அனுபவமே சுத்தசித்தாந் தமதாய்த்
தணிந்தநிலைப் பெருஞ்சுகமே சமரசசன் மார்க்க
சத்தியமே இயற்கையுண்மைத் தனிப்பதியே என்று
கணிந்துளத்தே கனிந்துநினைந் துரைத்திடில்அப் பொழுதே
காணாத காட்சிஎலாம் கண்டுகொள லாமே.

## ஆறாம் திருமுறை / மரணமிலாப் பெருவாழ்வு

தானேதான் ஆகிஎலாம் தானாகி அலனாய்த்
தனிப்பதியாய் விளங்கிடும்என் தந்தையைஎன் தாயை
வானேஅவ் வான்கருவே வான்கருவின் முதலே
வள்ளால்என் றன்பரெலாம் உள்ளாநின் றவனைத்

தேனேசெம் பாகேஎன் றினித்திடுந்தெள் ளமுதைச்
சிற்சபையில் பெருவாழ்வைச் சிந்தைசெய்மின் உலகீர்
ஊனேயும் உடலழியா தூழிதொறும் ஓங்கும்
உத்தமசித் தியைப்பெறுவீர் சத்தியம்சொன் னேனே.

சமயப்பற்றுள்ள காலத்தில் தான் சொன்ன, சிவம், பதி, அருட்பெருஞ்ஜோதி, வெளி, நடராஜர், சோதி, அருள், தெய்வம் இவைகள் சுத்த சன்மார்க்கத்தில் அல்ல.

இவை முறையே தனிச்சிவம், தனிப்பதி, தனி அருட்பெருஞ்ஜோதி, தனி வெளி, தனி நடராஜர், தனிச் சோதி, தனி அருள், தனித் தெய்வம் என்கிறார்கள்.

மேலும், பலப்பாடலில், தன் மார்க்கத்தில் வரும் கடவுளை தனி நாயகனே! தனிக்கடவுள்! தனிப்பெருங்கருணையே! தனி மாபதியே! தனி மெய்ப்பொருளே! தனி வெளி! என்கிறார்கள்.

## தனி கொள்கை

சுத்த சன்மார்க்க கொள்கை என்றாலே மரணம், பிணி மூப்பு பயம் துன்பம் முதலிய அவத்தைகளை தவிர்த்து மரணமில்லாப் பெருவாழ்வை பெறுதலே. சுத்த சன்மார்க்கம் ஒன்றே இந்த அவத்தைகளை நீக்கி சாகா நிலையை தரும். சமய நெறியில் மரணம் தவிர்த்துக் கொள்ள முடியாது என்கிறார் வள்ளலார். முக்தி. சமாதி போன்ற நிலைகள், பிறவாநிலை வேண்டல் மற்றும் சொர்கம், நரகம். விசாரம் சமய மதங்களில் உண்டு.

**ஆதாரப் பாடல் : -**

### ஆறாம் திருமுறை : மரணமிலாப் பெருவாழ்வு

இறந்தவரை எடுத்திடும்போ தரற்றுகின்றீர் உலகீர்
இறவாத பெருவரம்நீர் ஏன்அடைய மாட்டீர்
மறந்திருந்தீர் பிணிமூப்பில் சம்மதமோ நுமக்கு
மறந்தும்இதை நினைக்கில்நல்லோர் மனம்நடுங்கும் கண்டீர்
சிறந்திடுசன் மார்க்கம்ஒன்றே பிணிமூப்பு மரணம்
சேராமல் தவிர்த்திடுங்காண் தெரிந்துவம்மின் இங்கே

பிறந்தபிறப் பிதிற்றானே நித்தியமெய் வாழ்வு
பெற்றிடலாம் பேரின்பம் உற்றிடலாம் விரைந்தே.

- மற்றறிவோம் எனச்சிறிது தாழ்த்திருப்பீர் ஆனால்
- மரணமெனும் பெரும்பாவி வந்திடுமே அந்தோ
- சற்றும்அதை நும்மாலே தடுக்கமுடி யாதே
- சமரசசன் மார்க்கசங்கத் தவர்கள்அல்லால் அதனை
- எற்றிநின்று தடுக்கவல்லார் எவ்வுலகில் எவரும்
- இல்லைகண்டீர் சத்தியமீ தென்மொழிகொண் டுலகீர்
- பற்றியபற் றனைத்தினையும் பற்றறவிட் டருளம்
- பலப்பற்றே பற்றுமினோ எற்றும்இற வீரே.

**தனித் தகுதிகள் மற்றும் முக்கியத் தடைகள் ::**

சுத்த சன்மார்க்க கொள்கையை தழுபவர்களுக்கென வள்ளலார் சில அடிப்படை தனி தகுதிகளை குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆதாரம் பக்கம்: 411ல்

சுத்த சன்மார்க்கத்துக்கு முக்கிய தடையாகிய சமயம் மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களும், காமக் குரோதம் முதலியவைகள் நேரிட்ட காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக்கொள்பவரும், கொலை புலை தவிர்த்தவர்களும் ஆகிய இவர்கள் தான் சுத்த சன்மார்க்கத்துக்கு உரியவர்கள் ஆவார்கள். இவர்களே மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் - இவை முதலியவைகளைத் தவிர்த்துக் கொள்வார்கள்.

ஆதாரமாக சில பாடல்கள்

- சமயமும் மதமும் கடந்ததோர் ஞான
- சபைநடம் புரிகின்ற தனியைத்
- தமைஅறிந் தவருட் சார்ந்தமெய்ச் சார்வைச்
- சத்துவ நித்தசற் குருவை
- அமையஎன் மனத்தைத் திருத்திநல் லருளா
- சாதியைநீள் சமயத்தை மதத்தைஎலாம்
- விடுவித்தென் தன்னை ஞான
- நீதியிலே சுத்தசிவ சன்மார்க்க
- நிலைதனிலே நிறுத்தி னானைப்
- பாதியைஒன் றானவனைப் பரம்பரனைப்
- பராபரனைப் பதிஅ னாதி
- ஆதியைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்சோதியைப்பெற்றேன் அச்சோ அச்சோ.

குலத்திலே சமயக் குழியிலே நரகக்
குழியிலே குமைந்துவீண் பொழுது
நிலத்திலே போக்கி மயங்கிஏ மாந்து
நிற்கின்றார் நிற்கநான் உவந்து
வலத்திலே நினது வசத்திலே நின்றேன்
மகிழ்ந்துநீ என்உளம் எனும்அம்
பலத்திலே நின்றாய் எனக்கிது போதும்
பண்ணிய தவம்பலித் ததுவே.

தெய்வங்கள் பலபல சிந்தைசெய் வாரும்
சேர்கதி பலபல செப்புகின் றாரும்
பொய்வந்த கலைபல புகன்றிடு வாரும்
பொய்ச்சம யாதியை மெச்சுகின் றாரும்
மெய்வந்த திருவருள் விளக்கம்ஒன் றில்லார்
மேல்விளை வறிகிலர் வீண்கழிக் கின்றார்
எய்வந்த துன்பொழித் தவர்க்கறி வருள்வீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே.

இவை போன்று இன்னும் பல நூறுப்பாடல்கள் உள்ளன.

## தனி சங்கம்

19ம் நூற்றாண்டில் வள்ளலாரால் தோற்றுவிக்கப்பட்ட சுத்த சன்மார்க்கத்திற்கென ஒரு தனி சங்கத்தை தோற்றுவித்தார் வள்ளலார்.

18-07-1872 ல் வெளியிடப்பட்ட ஒரு அறிவிப்பில்

இன்று தொடங்கி சங்கத்திற்கு சமரச சுத்த சன்மார்க்க சத்தியச் சங்க மென்று திருபெயர் வழங்குதல் வேண்டும் என அறிவிக்கிறார்கள்.

## தனி கொடி

இதுவரை எந்தொரு சமய,மத,மார்க்கத்திற்கும் இல்லாத ஒரு சிறப்பு சுத்த சன்மார்க்கத்திற்கு உண்டு. அது சுத்த சன்மார்க்க கொடியே.

22-10-1873ல் சித்தி வளாகம் மேட்டுக்குப்பத்தில் கொடி கட்டி ஒரு மகாபேருபதேசம் செய்கிறார்கள். கொடி ஏற்றும் போது கொடி பாடல் ஒன்றை அருளியுள்ளார்கள்.

பக்கம் 474 : வள்ளலார் உபதேசிக்கிறார்

"இப்போதுதான் சன்மார்க்கக் கொடி கட்டிக் கொண்டது. அக்கொடி இப்போதுதான் கட்டிக் கொண்டது. அக்கொடிஉண்மையில் யாதெனில்: நமது நாபி முதல் புருவமத்தி ஈறாக ஒரு நாடி யிருக்கின்றது அந்த நாடி நுனியில் புருவமத்தியின் உட்புறத்தில் ஓர் சவ்வு தொங்குகின்றது அதன் அடிப்புறம் வெள்ளை வர்ணம் மேற்புறம் மஞ்சள்வர்ணம் அச்சவ்வின் கீழ் ஓர் நரம்பு ஏறவும் இறங்கவும் இருக்கின்றது. இக்கொடி நம் அனுபவத்தின்கண் விளங்கும். இவ் அடையாளக் குறிப்பாகவே இன்றைய தினம் வெளிமுகத்தில் அடையாள வர்ணமான கொடி கட்டியது. இனிஎல்லவர்க்கும் நல்ல அனுபவம் அறிவின்கண் தோன்றும்."

சுத்த சன்மார்க்க கொடிக்கென தனிப்பாடலை அருளியுள்ளார் வள்ளலார். இதோ;

1. சோதிக் கொடியே ஆனந்த சொருபக் கொடியே சோதிஉருப்
பாதிக் கொடியே சோதிவலப் பாகக் கொடியே எனைஈன்ற
ஆதிக் கொடியே உலகுகட்டி ஆளுங் கொடியே சன்மார்க்க
நீதிக் கொடியே சிவகாம நிமலக் கொடியே அருளுகவே.

2. பொருணற் கொடியே மாற்றுயர்ந்த பொன்னங் கொடியே போதாந்த
வருணக் கொடியே எல்லாஞ்செய் வல்லார் இடஞ்சேர் மணிக்கொடியே
தருணக் கொடியே என்தன்னைத் தாங்கி ஓங்குந் தனிக்கொடியே
கருணைக் கொடியே ஞானசிவ காமக் கொடியே அருளுகவே.

3. நீட்டுக் கொடியே சன்மார்க்க நீதிக் கொடியே சிவகீதப்
பாட்டுக் கொடியே இறைவர்வலப் பாகக் கொடியே
பரநாத நாட்டுக் கொடியே எனைஈன்ற ஞானக் கொடியே என்னுறவாம்
கூட்டுக் கொடியே சிவகாமக் கொடியே அடியேற் கருளுகவே .

4. மாலக் கொடியேன் குற்றமெலாம் மன்னித் தருளி மரணமெனும்
சாலக் கொடியை ஒடித்தெனக்குட் சார்ந்து விளங்கும் தவக்கொடியே
காலக் கருவைக் கடந்தொளிர்வான் கருவும் கடந்து வயங்குகின்ற
கோலக் கொடியே சிவஞானக் கொடியே அடியேற் கருளுகவே.

5. நாடாக் கொடிய மனம்அடக்கி நல்ல மனத்தைக் கனிவித்துப்
பாடாப் பிழையைப் பொறுத்தெனக்கும் பதம்ஈந் தாண்ட பதிக்கொடியே
தேடாக் கரும சித்திஎலாம் திகழத் தயவால் தெரிவித்த
கோடாக் கொடியே சிவதருமக் கொடியே அடியேற் கருளுகவே.

6. மணங்கொள் கொடிப்பூ முதல்நான்கு வகைப்பூ வடிவுள் வயங்குகின்ற
வணங்கொள் கொடியே ஐம்பூவும் மலிய மலர்ந்த வான்கொடியே

கணங்கொள் யோக சித்திஎலாம் காட்டுங் கொடியே கலங்காத
குணங்கொள் கொடியே சிவபோகக் கொடியே அடியேற் கருளுகவே.

7. புலங்கொள் கொடிய மனம்போன போக்கில் போகா தெனைமீட்டு
நலங்கொள் கருணைச் சன்மார்க்க நாட்டில் விடுத்த நற்கொடியே
வலங்கொள் ஞான சித்திஎலாம் வயங்க விளங்கு மணிமன்றில்
குலங்கொள் கொடியே மெய்ஞ்ஞானக் கொடியே அடியேற் கருளுகவே.

8. வெறிக்கும் சமயக் குழியில்விழ விரைந்தேன் தன்னை விழாதவகை
மறிக்கும் ஒருபே ரறிவளித்த வள்ளற் கொடியே மனக்கொடியைச்
செறிக்கும் பெரியர் உளத்தோங்கும் தெய்வக் கொடியே சிவஞானம்
குறிக்கும் கொடியே ஆனந்தக் கொடியே அடியேற் கருளுகவே.

9. கடுத்த விடர்வன் பயம்கவலை எல்லாம் தவிர்த்துக் கருத்துள்ளே
அடுத்த கொடியே அருளமுதம் அளித்தென் தனைமெய் அருட்கரத்தால்
எடுத்த கொடியே சித்திஎலாம் இந்தா மகனே என்றெனக்கே
கொடுத்த கொடியே ஆனந்தக் கொடியே அடியேற் கருளுகவே.

10. ஏட்டைத் தவிர்த்தென் எண்ணமெலாம் எய்த ஒளிதந் தியான்வனைந்த
பாட்டைப் புனைந்து பரிசளித்த பரம ஞானப் பதிக்கொடியே
தேட்டைத் தனிப்பேர் அருட்செங்கோல் செலுத்தும்சுத்த சன்மார்க்கக்
கோட்டைக் கொடியே ஆனந்தக் கொடியே அடியேற் கருளுகவே.

## தனி மரபுகள்

சுத்த சன்மார்க்கத்திற்கென தனி மரபுகள் நான்கு உள்ளது. இவை கடவுளால் வள்ளலாருக்கு உரைக்கப்பட்டது.

**ஆதாரம்:**

**ஆறாம் திருமுறை : நடராஜபதி மாலை**

சாகாத கல்வியே கல்விஒன் றேசிவம்
தான்என அறிந்தஅறிவே
தகும்அறிவு மலம்ஐந்தும் வென்றவல் லபமே
தனித்தபூ ரணவல்லபம்
வேகாத காலாதி கண்டுகொண் டெப்பொருளும்
விளையவிளை வித்ததொழிலே
மெய்த்தொழில தாகும்இந் நான்கையும் ஒருங்கே
வியந்தடைந் துலகம்எல்லாம்
மாகாத லுறஎலாம் வல்லசித் தாகிநிறை
வானவர மேஇன்பமாம்
மன்னும்இது நீபெற்ற சுத்தசன் மார்க்கத்தின்

மரபென் றுரைத்தகுருவே
தேகாதி மூன்றும்நான் தருமுன்அருள் செய்தெனைத்
தேற்றிஅருள் செய்தசிவமே
சிற்சபையின் நடுநின்ற ஒன்றான கடவுளே
தெய்வநட ராஜபதியே.

## தனி மந்திரம்

சுத்த சன்மார்க்க தனி நெறிக்கென ஒரு "மகா மந்திரம்" உண்டு. ஆண்டவர் தன் உண்மையை வெளிக்காட்டும் திரு மந்திரம் என்கிறார் வள்ளலார்.

இம்மகாமந்திரம் குறிந்து வள்ளலார் கீழ்வருமாறு 22-10-1873 அன்று உபதேசிக்கிறார்

இத் தருணம் ஆண்டவர் எல்லாவற்றையும் நீக்கி எல்லோரும் மேலான இன்பத்தை அடையும் பொருட்டு, முடிவான இன்பானுபவத்திற்குச் சாதக சகாயமான திருவருள் மகாவாக்கியத் திருமந்திரத்தை - தமது உண்மையை வெளிப்படக்காட்டும் மகாமந்திர வாக்கியத்தை- எனக்கு வெளியிட்ட அவ்வண்ணம், எனது மெய்யறிவின்கண் அனுபவித்தெழுந்த -உண்மையறிவனுபவானந்த இன்பத்தை நீங்கள் எல்லவரும் என்போல் ஐயம் திரிபு மயக்கம் இன்றி அடையஎன்னுள்ளே எழுந்து பொங்கிய ஆன்ம நேய உரிமைப்பாட்டுரிமையைப் பற்றிக் குறிப்பித்தேன் குறிப்பிக்கின்றேன் குறிப்பிப்பேன். நமது ஆண்டவர் கட்டளையிட்டது யாதெனில், நமக்கு முன் சாதனம் கருணையானதினாலே, ஆண்டவர் முதற்சாதனமாக,

அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ் ஜோதி

என்னும் திருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக் கொண்டார். தயவு, கருணை, அருள் என்பவை ஒருபொருளையே குறிக்கும். ஆதலால் பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம். அது ஒப்பற்ற பெருந் தயவுடையபேரறிவேயாம். இஃது வாச்சியார்த்தம். இவ்வண்ணம் சாதனம் முதிர்ந்தால், முடிவான இன்பானுபவம்பெறுவதற்குத் தடையில்லை.

## திரு அகவல்

சுத்த சன்மார்க்கத்தால் தான் பெற்ற தனி அனுபவத்தை, தனி இன்பத்தை, தனி அருளை, தனி அமுதத்தை, தனி சுகத்தை மற்றும் தனி செங்கோல் நடத்தும் தனி நாயகனைப் பற்றி 1596 திருவரிகளை ஒரே நாள் இரவில் அருளியுள்ளார் வள்ளலார். இதுவே திருஅகவல் ஆகும். இதன் அசல் சத்திய தருமச்சாலையில் வைத்து பாதுகாத்து போற்றப்பட்டு வருகிறது. திருஅகவல் என்பது இயற்கை உண்மை, இயற்கை விளக்கம், இயற்கை இன்பம் ஆகும்.

## தனிப் பாசுரப் பாடல்கள்

தனது முடிபான சுத்த சன்மார்க்க தனி நெறிக்கான 28 பாசுரப்பாடல்கள் உட்பட 2500 பாடல்களுக்கு மேல் அருளியுள்ளார் வள்ளலார். அவை இன்று ஆறாம் திருமுறை என நிலையத்தால் வெளியிடப்படுகிறது.

## அறிவிப்புகள், கட்டளைகள் மற்றும் விதிகள்

வள்ளலார் அவர்கள் தனது முடிபான கொள்கையை நிலை நிறுத்தும் பொருட்டும் சில அறிவிப்புகள், கட்டளைகள் மற்றும் விதிகள் வெளியிட்டுள்ளார்கள். 12-04-1871, 11-01-1872, 09-031872, 25-11-1872, 08-09-1873, மற்றும் 30-01-1874 இவைகள் முறையே உரைநடைப்பகுதி பக்கங்கள் 547,548,550,553,554 மற்றும் 555 ஆகும்.

## நிலையங்கள்

## "சத்திய ஞானசபை"

சுத்த சன்மார்க்க தனி நெறி அடிப்படையில் திருவருட் சம்மதத்தால் வடலூரில் 1872 ஆண்டு சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை ஒன்றை வள்ளலார் நிறுவியுள்ளார்கள். இச்சபை குறித்த ஒரு தனி விளம்பரம் 25-11-1872 அன்றும், இந்த சபையில் எங்ஙனம் வழிபாடு நடைப்பெற வேண்டும் என சபை வழிபாட்டு விதி குறிப்பு ஒன்றை 18-07-1872 அன்றும் வெளியிட்டுள்ளார்.

## "சித்தி வளாகம்"

மேட்டுக்குப்பத்தில் இருக்கின்ற இந்த புனித வளாகத்தில் தான் வள்ளலார் இறையருளால் பெற்ற தனி வடிவமாகிய ஒளி தேகத்தை பெற்று 30.1.1874ல் வெளிப்படுகிறார்கள். இந்நிலையத்திற்கு வள்ளலாரே சித்தி வளாகம் எனப்பெயரிட்டு அழைக்கிறார்.

## " சத்திய தருமச் சாலை "

இறையருளை பெறுவதற்கு ஜீவகாருண்யமே துவாரமாக உள்ளபடியால் ஜீவதயைக்காக வள்ளலாரால் நிறுவப்பட்டதே சமரச சுத்த சன்மார்க்க சத்திய தரும சாலை. கடந்த 151 வருடங்களுக்கு மேலாக வள்ளலாரால் மூட்டப்பட்ட அடுப்பு நெருப்பு இன்றுவரை அணையா அடுப்பாக எரிந்து ஏழைகளுக்கு பசியாற்றி வருகிறது திருவருட் செயலே.

இங்ஙனம் வள்ளலாரின் சுத்த சன்மார்க்க தனி நெறிக்கு மேற்படி நிலையங்கள் விளங்கி வருகிறது. மேதகு தமிழக அரசு கீழ் இயங்கும் இந்து சமய அற நிலைய ஆட்சித்துறை மேற்படி நிலையங்களை பராமரித்து வருகிறது. நிலையத்திற்கு பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் 5 பேர் அரசால் நியமிக்கப்படுகிறார்கள்.

## சுத்த சன்மார்க்க ஆகாரம், உடை

வள்ளலார் சுத்த சன்மார்க்க சாதகர்களுக்கென ஆகாரம் பற்றிய குறிப்புகள் தந்துள்ளார்கள். அவைப் பற்றி விளக்கமாக உ.ந.ப.பக்கங்கள் 429 முதல் 433 வரை தரப்பட்டுள்ளது. உடை பற்றிய குறிப்பும் பக்கம் 425 ல் தரப்பட்டுள்ளது.

## சுத்த சன்மார்க்க தனி நிலைகள்

சுத்த சன்மார்க்கத்தில் சமாதிப் பழக்கம் பழக்கமல்ல, சகஜப் பழக்கமே பழக்கம் என்கிறார் வள்ளலார்.

மேலும், சுத்த சன்மார்க்கத்தின் அக அனுபவ நிலைகளையும் பக்கம் 438 விரிவாக விளக்கி உள்ளார்கள். இவை மூலம் சுத்த சன்மார்க்கத்தில் அக அனுபவமே உண்மை எனத் தெரிந்துக் கொள்ள முடிகிறது.

## சுத்த சன்மார்க்கத்தின் முடிபாகிய கல்வி

மிக முக்கியமாக வள்ளலாரின் முடிபான தனி நெறியில் தெரிந்துக் கொள்ள வேண்டிய உண்மை "சாகா கல்வி". சாகா கல்வி என்றால் என்ன? யாரால் இக்கல்வி தெரியப்படுத்தப் படுகிறது, சாகா கல்வியால் பெறப்படும் பயன் என்ன? என உபதேசம் பக்கம்439 மற்றும் பல பாடல்களில் வள்ளலார் விளக்கம் தந்துள்ளார்கள். சிறிய குறிப்பாக இது குறித்து காண்போம்:

இங்கு நித்தியதேகம் என்பது ஒரு தனி வடிவம்.

**சாகாத்தலை**

**வேகாக்கால்**

**போகாப்புனல்**

இவை மூன்றும் சாகாத கல்வியைத் தெரிவிக்கும். மேற்குறித்த மூன்றும் பரமார்க்கமாகிய "ஞான யோகக் காட்சியில்" "யோகஅனுபவங்களின்" உண்மைப் பொருள். இந்த சாகாத தலை, வேகா கால் என்பவைப் பற்றி நமக்கு உரைப்பதும், போகப்புனல் பற்றி நமக்குத் தெரிவிப்பதும் ஆண்டவரே என சத்தியமாக இங்கு அறியவும்.

(உபதேசக்குறிப்பு பக்கம் 438)

"சாகாதவனே சுத்த சன்மார்க்கி " என்கிறார் வள்ளலார்.

ஆண்டவர் நிலைக் கண்டு, அக்கடவுளின் திருவருட் திறத்தால் வள்ளலார் சாகாத கல்வி திறம் அறிந்து, அருளால் தனி வடிவம் பெற்றார்கள். வள்ளலார் சுத்த சன்மார்க்கப் பெரும் பயனாகிய "மரணமில்லா பெருவாழ்வு" பெற்றார்கள். அவர் உருவம்தோற்றியும் தோற்றாமலும் இருக்கும். அவர் நினைத்தால் காணமுடியும். இல்லாது காண முடியாது. இதை அவர் தம் பாடல்கள்மூலம் அறியலாம்.

**"எதனாலும் தடுக்கப்படாத வடிவம்" பாடல் எண் 788::**

ஆராலும் அறிந்துகொளற் கரியபெரும் பொருளே
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
காராலும் கனலாலும் காற்றாலும் ககனக்
கலையாலும் கதிராலும் கடலாலும் கடல்சூழ்
பாராலும் படையாலும் பிறவாலும் தடுக்கப்
படுதலிலாத் தனிவடிவம் எனக்களித்த பதியே
சீராலும் குணத்தாலும் சிறந்தவர்சேர் ஞான
சித்திபுரத் தமுதேஎன் நித்திரைதீர்ந் ததுவே.

**பாடல் எண் 1733 "எதனாலும் அழியாத வடிவம்" ::**

காற்றாலே புவியாலே ககனமத னாலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிறவியற்றும் கொடுஞ்செயல்க ளாலே

வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்அளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே
ஐற்றாலே ஆழிவெனநீர் நினையாதீர் றுலகீர்
எந்தைஅருட் பெருஞ்ஜோதி ஆறைவனைச்சார் வீரே.

**உரு, அரு, உருஅரு அவை ஒன்றுமிலா வடிவம்**

பாடல்:-

உருவாய் அருவாய் உருவரு வாய்அவை
ஒன்றுமல் லீர்ஆங்கு வாரீர்
என்றும்நல் லீர்ஆங்கு வாரீர்.

**பாடல் எண் : 155 : "அருட்சோதி தேகம்" :-**

களித்தென துடம்பில் புகுந்தனை எனது
கருத்திலே அமர்ந்தனை கனிந்தே
தெளித்தஎன் அறிவில் விளங்கினை றுயிரில்
சிறப்பினால் கலந்தனை உள்ளம்
தளிர்த்திடச் சாகா வரங்கொடுத் தென்றும்
தடைபடாச் சித்திகள் எல்லாம்
அளித்தனை எனக்கே நின்பெருங் கருணை
அடியன்மேல் வைத்தவா றென்னே.

அன்பர்களே!

மேற்படி ஆவணங்கள், குறிப்புகள், வரலாற்று உண்மைகள் மூலம் வள்ளலாரின் " சுத்த சன்மார்க்கம் " ஒரு தனி நெறி என அறிய முடிகிறது.

இங்ஙனம் சுத்த சன்மார்க்கம் தனி நெறியாக அறிய வரும் போது வெளிப்படுகின்ற மற்றொரு உண்மை யாதெனில் சுத்த சன்மார்க்க நெறியானது எல்லோருக்கும் பொதுவாக விளங்கும் நெறியாக உள்ளது. இதோ வள்ளலாரே குறிப்பிடுகிறார்கள்ளூ

"எல்லா சமயங்களுக்கும் எல்லா மதங்களுக்கும் எல்லா மார்க்கங்களுக்கும் உண்மை பொது நெறியாக சுத்த சன்மார்க்கம் விளங்குகிறது என்கிறார்.

திருஅகவலில்,

" பொதுவுணர்வு உணரும் போது அலால் பிரித்தே
அது எனில் தோன்றா அருட்பெருஞ்ஜோதி"

"எச்சபை பொதுஎன இயம்பினர் அறிஞர்கள்,
அச்சபை இடங்கொளும் அருட்பெருஞ்ஜோதி"

சுத்த சன்மார்க்கதிற்கும் மற்ற சமய,மத மார்க்கங்களுக்கும் உள்ள தொடர்பை பற்றி குறிப்பிடும் போது

ஆன்மாவுக்கு அருள் எப்படி அநந்நியமோ, அதுபோல் சுத்த சன்மார்க்கத்திற்குப் பூர்வத்தில் சொன்ன சன்மார்க்கங்கள் யாவும் அநந்நியம். அந்நியமல்ல.இம் மார்க்கத்திற்கு மேற்குறித்த மார்க்கங்கள் அல்லாதனவே யன்றி இல்லாதன வல்ல.

அதே நேரத்தில், சுத்த சன்மார்க்கந்தான் யாதெனில்: சுத்தம் என்பது ஒன்றுமல்லாதது. சுத்தம் என்பது சன்மார்க்க மென்னுஞ் சொல்லுக்குப் பூர்வம் வந்ததால், மேற்குறித்த சமய மதானுபவங்களைக் கடந்தது. சுத்தமென்பது ஒன்றுமில்லாதது. ஆதலால், சுத்தமென்பது சன்மார்க்கம் என்னும் சொல்லுக்கு முன் வந்தமையால், முன் சொன்ன சமயமதங்களைத் தாண்டினது. அதன் அனுபவங்களையும் கடந்தது.

ஆதலால், சமயத் தேவர்களை வழிபாடு செய்வது அவசியமல்ல. மேற்குறித்தவர்கள் அற்ப சித்தியைப் பெற்று, அதில் மகிழ்ந்து அகங்கரித்து,மேல் படிகள் ஏறவேண்டியவைகளை ஏறிப் பூரண சித்தியை யடையாமல் தடைப்பட்டு நிற்றல்போல், இங்கு மற்றவைகளை உன்னி அவலமடைந்து நில்லாமல், சர்வ சித்தியுடைய கடவுள் ஒருவருண்டென்று அவரை உண்மை அன்பால் வழிபாடு செய்து, பூரண சித்தியைப் பெற வேண்டுவது சன்மார்க்கக் கொள்கை. மேலும் தனித்தலைவன் லட்சியம் தவிர அநித்திய சடதுக்காதிகளைப் பொருட்படுத்தி உபாசனாதி மார்க்கமாய் வழிபடுவது கொள்கை யல்ல என்கிறார் வள்ளலார்.

எனவே, வள்ளலாரின்

**சுத்த சன்மார்க்கம்**

**ஒரு தனி நெறி**

**ஒரு புதிய மார்க்கம்**

நன்றி

அன்புடன் : **ஏபிஜெ அருள். கருணை சபை சாலை.**

## வள்ளலாரின் சுத்த சன்மார்க்கம் தனி நெறி எனவும் ஒரு புதிய மார்க்கம் எனவும் எதற்கு சொல்லப்பட வேண்டும்?

திருவருட்பிரகாச வள்ளலார் அவர்கள் சமயப்பற்றை விட்டுவிட்டு, ஓர் உண்மை கடவுள் உண்டென்றும் உண்மை அன்பால் கருத்தில் கருதி வழிபாட்டு முறையில் மாறினார்கள். சமய ஆசாரங்கள், உலகாசாரங்களில் பற்று வையாமல், அக்கட்டுப்பாட்டு ஆசாரங்களை விட்டொழித்து, உண்மைத் தலைவனையே நினைந்து, உணர்ந்து, நெகிழ்ந்து கண்ணீரால் உடல் நனைந்து துதித்தார்கள். அங்ஙனம் அவரின் இடைவிடாத கருணை நன்முயற்சி பயனில் திருவருள் இரங்கி வந்து அவர் உள்ளத்திலிருந்து அவர் அறிவினில் அனைத்து உண்மையையும் தெரிவித்து பேரின்ப பெருவாழ்வை அருளியது.

☞ **மேற்படி நெறி, பயிற்சி, அருள் பயன் உலகில் எந்தொரு சமய,மத,மார்க்கங்களிலும் கிடையாது. எல்லா சமய, மத, மார்க்கங்களின் புனித நூல்களில் சொர்க்கம் நரகம் சொல்லப்பட்டுள்ளதால் மரணம் முடிவாகுகிறது. ஆனால் மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகளை நீக்கி பேரின்ப பெருவாழ்வை பெறுவதே கொள்கையாக கொண்டதே வள்ளலாரின் தனி வழி**

இந்நிலையில்

☞ **திருவருட் பிரகாச வள்ளலாரை அவரால் கைவிடப்பட்ட சமய நெறியில் தொடர்ந்து வெளிப்படுத்துகின்ற முரணான செயல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கவும்,**

☞ **வள்ளலாரின் உண்மை பொது நெறி உலகிற்கு உள்ளது உள்ளப்படியே விரைந்து வெளிப்படுவதற்கும்,**

☞ **வள்ளலார் அவர்களால் சொல்லப்பட்ட சத்திய வார்த்தை "நம்மவர்கள்" இவர்கள் யாரெனில் வள்ளலாரின் நெறியை சார்ந்தவர்கள். இவர்கள் சார்ந்துள்ள இந்த நெறியானது ஒரு தனி நெறி என்ற அடிப்படையிலும்,**

☞ **மேதகு அரசால் அங்கீகாரம் கிடைக்கும் பட்சத்தில் இம்மார்க்கம் உலக மக்களிடையே விரைந்து வெளிப்படும் என்பதினாலும்,**

☞ வள்ளலாரின் சுத்த சன்மார்க்கம் ஒரு புதிய மார்க்கம், தனி நெறி என அங்கீகாரம் கிடைத்தால் நாம் சுத்த சன்மார்க்கத்தார் என ஆவணங்களில் பதிவிடும் உரிமை கிடைக்கும் என்பதினாலும்,

☞ சுத்த சன்மார்க்கத்தார் என்ற விளம்புகை செய்யுமிடத்து சாதி,சமய,மத இன வேறுபாடு அற்றவர்கள் என்ற விசயம் வெளிப்பட்டு ஒரு பொது பார்வை உணர்வு சமூகத்தில் பரவும் என்ற நல்லெண்ணத்திலும்

☞ தனி நெறி என சட்டப்படி நிலை நாட்டும் பட்சத்தில் ஏற்கனவே இருந்த சமய சன்மார்க்கம், மத சன்மார்க்கம் என்ற வரிசையில் மூன்றாவதாக சுத்த சன்மார்க்கம் என்ற வள்ளலாரின் தனி மார்க்கம் உறுதியாகி, மக்களிடையே அறிஞர் பெருமக்களிடையே ஒரு நல்ல விசாரணை தோன்றும் என்பதினாலும்,

☞ உலகம் முழுதும் உள்ள பொது உணர்வு உள்ளவர்கள், நற்செய்கை செய்பவர்கள், அன்புள்ளம் கொண்டவர்களிடத்தில் உள்ளது உள்ளபடியாக இந்த தனி நெறி வெளிப்படுகையில் இம்மார்க்கப் பயன் பெறும் மனிதர்கள் கூடுவர் என்பதினாலும்

சுத்த சன்மார்க்கத்தை 19 ம் நூற்றாண்டில் தோன்றிய புதிய மார்க்கம் எனவும், தனி நெறி எனவும் விளம்புகை செய்ய நாம் மேதகு மாநில மத்திய அரசுகளை வேண்டி விண்ணப்பம் செய்வோம்.

நன்றி

அன்புடன்: **இராமலெட்சுமி @ ஏபிஜெ அருள்,**

**கருணை சபை சாலை, மதுரை.**

**apjarul1@gmail.com**

**www.atruegod.org**

**www.facebook/vallalarapjarulkarunai**

**Youtube : Vallalar APJ Arul Karunai Sabai**

# "சாதி பொய்".- எப்படி? - ஏபிஜெ அருள்.
## பொய்யென நிருபித்தார் "நம்மய்யா."

ஊரே "நம்மய்யா"வுக்கு மாலைப் போட்டு கொண்டாடி அவரிடம் ஆசீர்வாதம் வாங்கியது.

யார் அந்த பெரியவர் "நம்மய்யா"?. "நம்மய்யா" 90 வயது முதியவர்.

ஊரில் உள்ள ஸ்கூல், ஆஸ்பத்திரிக்கு தனது நிலங்களை கொடுத்தவர். தனது நகை கடையில் பார்வையற்றோர், மாற்றுத்திறனாளிகள், பெற்றோர் இழந்தோர் இவர்களின் கல்யாண செலவுகள், கிராம இளைஞரின் மேல்படிப்பு செலவுகள், கலப்பு திருமணம் செய்தவர்களுக்கு இடம் பணம் மொய்யாக செய்பவர். இப்படி பல சேவைகளை செய்யும் தனிமை உடைய தாத்தா தான் இவர். ஊரார் இவரை செல்லமாக அழைக்கும் பெயர் "நம்மய்யா". இந்த மாப்பட்டி கிராமத்து எல்லார் வீட்லேயும் இவர் படம் உண்டு. இவரை சாமியா பார்க்கிறவர்களும் உண்டு.

இரவு 10 மணி. பஜாரில் உள்ள தனது பெரிய மருந்து கடையை அடைத்து விட்டு, குளிர்ந்த நிலவு வெளிச்சத்தில் புன்னகையை சுமந்து தளராத மெதுவான நடையில் வீட்டை அடைந்தார் நம்மய்யா.

மறுநாள் காலை ஒரு செய்தியால் நாடே ஒரு பரபரப்பில் ஆனது. அதற்கு காரணம் இந்த ஊர் "மாப்பட்டி" தான்.

மக்களிடம் பிரபலமான இந்த ஊரை சேர்ந்த வேறுபட்ட சாதி சமயத்தை சேர்ந்த அரசியல்வாதி இராசுவும், நடிகர் சூப்பர் பியாலுவுக்கும் இடையில் தலைநகரில் ஏற்பட்ட கருத்து மோதல். இந்த இருவர்களின் தொடர் அறிக்கை மோதலால் அவர்களின் ஆதரவாளர்களும் மோதி ஒருவருக்கொருவர் அடித்து மண்டையை உடைத்துக் கொண்டனர். இருவரின் சொந்த ஊர் இந்த "மாப்பட்டியிலும்" கலவரம் வெடித்தது. கலவரத்தில் இரு பிரிவினரும் பஜார் கடைகளை அடைக்க சொல்லி வரும் போது "நம்மய்யா" கடைக்கும் இரு கோஷ்டியினரும் வந்தனர். கம்பு கத்தி வேறு பல ஆயுதத்துடன் நின்ற அனைவருமே இளைஞர்கள். நேற்று தனக்கு நடந்த ஊர் பாராட்டு விழாவில் சாதி சமய வேறுபாடில்லாமல் கலந்து கொண்ட இளைஞர்கள் இன்று ஒருவரைஒருவர் வெட்ட அருவாளை தூக்கி இருக்கும் காட்சியை கண்டு அவரையறியாமல் அவர் கண்கள் கலங்கின. ஊராரிடம் பாசம் காட்டிய "நம்மய்யா" கண்களில் கண்ணீர் மல்கி ஓடுவதை கண்ட இரு பிரிவு இளைஞர்கள் சிறிது அதிர்ந்தனர்.
அவரிடம் அய்யா நீங்கள், சீக்கிரம் கிளம்புங்க, எங்க சாதி தலைவரை கேலி பண்ணின இந்த கீழ் நாய்களை உங்கள் முன்பு வெட்ட மனமில்லை என்று கூட்டத்தின் ஒரு சைடிலிருந்து குரல் வந்தது.

டேய், யாருடா கீழ்நாய்ங்க? உழைக்க துப்பு இல்லாது படத்துல வேசம் போட்டுட்டு எங்க துட்ல வாழற நீ எங்கள தீட்டுக்காரன் சொல்லுவியா? டேய் இன்னிக்கு தொலைஞ்சீங்கடா? என்று இந்த சைடு இளைஞர்கள்.

இதை பார்த்த "நம்மய்யா," தீடீர்னு சத்தமா சிரித்தார். தொடர்ந்து சிரித்தார். கண்ணீர் விட்டுக் கொண்டியிருந்தவரு இப்ப ஏன் பெரிசா சிரிக்கிறாரு? என இரு சைடு இளைஞர்களும் அமைதியானார்கள்.

"அய்யா" என அழைத்து "எங்கள பார்த்து ஏன் இப்படி சிரிக்கீறிங்க?" காரணத்தை சொல்லுங்க அய்யா என்றனர்.

"நம்மய்யா" அவர்களிடம், எனது அன்பு செல்லங்களா,

தாத்தா, இப்ப ஒரு உண்மையை சொல்லப் போறேன். அதை கேட்டப் பிறகு உங்களுக்குள் சண்டை போடுவது தான் சரி என்றால் சண்டை போடுங்க. இல்ல, மாற முடியாதுனு சொன்னா, நீங்க இரண்டு சமயத்து சாதி காரங்களும் சேர்ந்து என்னை முதலில் வெட்டிட்டு, உங்களுக்குள் வெட்டிக்குங்க என்று சொல்லி அமைதியானார். திருப்பியும் இருபுறமும் பார்த்து சத்தமாக சிரித்தார். இப்படி வித்தியாசமா சிரிச்சிட்டு இருக்கிற "நம்மய்யாவை" கேள்வி குறியா பார்த்தனர் அனைவரும்.

"நம்மய்யா" அவர்களிடம் தொடர்ந்து பேச ஆரம்பித்தார்.

"இன்னிக்கு நம்ம சாதி, சமயம் சேர்ந்தவர்னு நீங்க சொல்ற இராசுவையும், பியாலுவையும் உங்களையும் நினைச்சா, ஒரே சிரிப்பாதான் வருது. இந்த நேரத்துக்கு தான் இத்தனை வருஷமா நான் காத்துட்டு இருந்தேன். உண்மை ஆண்டவரு இப்ப தான் கருணையை காண்பிக்கிறாரு.

நீங்க நான் சொல்றத கவனமா கேட்டு, அப்படி கேட்டத சிந்தித்து பார்ப்போம்னு நீங்க எனக்கு சத்தியம் பண்ணினா, நான் இப்ப ஒரு பெரிய உண்மையை சொல்லுவேன். இல்லைனா உங்களையும், உங்க சாதி தலைவர்களையும், இந்த நாட்டையையும் பார்த்து சிரிக்கிறத தவிர வேறு என்ன செய்ய முடியும்? என்றார் நம்மய்யா.

தனது உறுதியான வார்த்தையால் ஏற்படுத்திய குழப்பம் இளைஞர்களிடம் ஒரு புதிய தாக்கத்தையும், பரபரப்பு உணர்ச்சியையும் ஏற்பட்டதை கண்ட "நம்மய்யா" அவர்களிடம்

"இம்ம்.. எல்லாரும் சத்தியம் செய்யுங்க.." என்று சத்தமாக சொன்னார். நம்மய்யாவின் இந்த சத்தம், அவர்களிடம் ஏற்படுத்திய ஆழ்ந்த அமைதியே அவர்களின் சத்தியமானது.

"நம்மய்யா" தொடர்ந்தார். இன்று இந்த மாபிரபஞ்சத்தில் சந்தோசமா வாழ வேண்டி பிறந்த உங்களை அங்ஙனம் சந்தோசமா வாழவிடாமல் உங்களுக்குள் சண்டை ஏற்படுத்தி, துன்பமே இறுதியில்

தரும் உங்கள் சாதிகள் சமயங்கள் பொய் பொய்யே.

அவை உங்கள் அறிவால் தேர்ந்தெடுக்கப்பட்டவை அல்ல. பிறப்பால் வரும் சாதி, குடும்ப வழியில் வரும் சமயம் இவை என நீங்கள் உணர வேண்டும். உங்கள் அன்பு, அறிவு விருத்திக்கு தடையாக உள்ளது.

நீங்கள் என்றாவது சாதி சமய குறித்து விசாரணை செய்து உள்ளீர்களா? நீங்கள் வாழ வழி வகை செய்யவே உங்களுக்கு நேரம் சரியாக உள்ளது?

இப்பமாவது கொஞ்ச நேரம் ஒதுக்கி நான் சொல்றதில் விசாரிங்க...

"உங்கள் சாதிக்கும் உங்கள் அறிவுக்கும் என்ன தொடர்பு?

எந்த சமயம் உங்களை உண்மையை நோக்கி சிந்தித்து விசாரிக்க சொல்லுது? வேறுப்பட்ட பல சமயங்கள் உங்களிடையே உள்ளது. ஆனால் உங்கள் எல்லோருக்கும்

ஒரே இன்பம் ஒரே துன்பம் ஒரே சாவு தானே?

இயற்கை படைப்பான சூரியன் சந்திரன் ஐம்பூதங்கள் எல்லாம் நமக்கு பொதுவா இருக்கும் போது, நம் எல்லாருக்கும் ஒரே கடவுள் தானே இருக்க முடியும்.

உங்க சாதி பொய்னு இப்ப நிரூபிக்க போறேன், என தன் வயசை மறந்து, நிமிர்ந்து, இளைஞரின் கண்களை பார்த்து தொடர்ந்து பேசினார் "நம்மய்யா".

"59 வருசத்துக்கு முன்னாடி நம்ம ஊர் அரசு ஆஸ்பத்திரியில் இரண்டு ஆண் குழந்தைகள் ஒரே நேரத்தில் பிறந்தது. அதில் ஒரு குழந்தை பெரிய இடம். ஆஸ்பத்திரி வசதி இல்லைனு மறுநாளே அந்த பெரிய இடத்துகாரங்க குழந்தையுடன் போயிட்டாங்க. அதே ஆஸ்பத்திரியில் சீரியஸாக சேர்த்திருந்த என் அம்மாவின் அருகில் நானிருந்தேன். உயிர்விளிம்பில் இருந்த என் தாயிடம் என் தந்தை யாருன்னு? கேட்டேன்.

அதுக்கு என் தாய் செல்வத்தை அள்ளி கொடுத்தவங்க நிறைய பேரு, அதுல உண்மையான செல்வமாகிய உன்னை கொடுத்தவங்கள அடையாளம் காண முடியல என்ற என் அம்மாவின் வார்த்தை என்னுள் இடியாக இறங்கியது. அதை கண்ட என் தாய் என் கை பிடித்து வாழ்ந்து வந்த பாவ இடத்திலே உன்ன வளர்க்க விரும்பாம இந்த புண்ணிய தமிழ் கிராமத்துக்கு வந்திட்டேனு.. கண்ணீர் விட்டு.... கண்ணு மூடிட்டா. நான் கேட்ட எனது பிறப்பு உண்மை சுவை கசந்தது. இந்த பொய் பகட்டான சாதி சமயத் தோலை போர்த்திய ஒழுக்கமில்லாத தலைவர்கள் மேல் வெறுப்பும், என் போன்ற உண்மையறியாத இளைஞர்கள் மேல் பரிதாபமும் ஏற்பட்டது. மனம் அமைதி அடைய ஆஸ்பத்திரியின் ஒதுக்கு புறமா

நான் போன போது, ஆஸ்பத்திரி பணியில் இருந்த நர்சுகள் இரண்டு பேர் ரகசியமா பேசியது எனக்கு கேட்டது.

ஒருத்தி; "அக்கா ஒரு தப்பு நடந்துட்டது. நேற்று பிறந்த ஆண் குழந்தைகளை குளிப்பாட்டி அவங்க அம்மாவிடம் வைக்கும் போது தவறுதலா குழந்தையை மாத்தி வைத்துவிட்டேன் நான். விசயம் தெரிந்த பிறகு சரி செய்யவும் முடியல என்னால். இத எப்படி சொல்லனும் தெரியாம நேத்திக்கு இருந்துட்டேன். இன்னைக்கு வந்து பாத்தா பெரிய வீட்டு குழந்த டவுண் ஆஸ்பத்திரிக்கு போய்ட்டாங்கலாம். அக்கா எனக்கு பயமா இருக்கு.

அதற்கு மற்றொருத்தி; அவள் இது பெரிய விசயம் வெளியே தெரிஞ்சா இரண்டு சாதிகாரனும் நம்மள கொன்னுடுவாங்க. நமக்குள்ளயே விட்டுவிடு.... போய் ஒன்னும் தெரியாத மாதிரி வேலையைப்பாரு".

அம்மாவை இழந்து தந்தையும் தெரியாம சமுதாயத்து மேலே கோபமா கலங்கி இருந்த எனக்கு இந்த விசயத்தில எதுவும் செய்ய பிடிக்கல. பல வருடங்கள் ஓடிற்று.

நீங்க இப்ப சாதி சமய தலைவர்னு யார் மேலே வெறித்தனமா பற்று வைத்து இருக்கிறீங்களோ அந்த இராசுவும், பியாலும் தான், அந்த "மாறி போன குழந்தைகள்".

இப்ப சொல்லுங்க, நீங்க சொல்லும் சாதி பொய்யா பொய் இல்லையா? அந்த சாதியை நிலை நாட்டும் சமயமும் பொய் தானே. இத்தனை வருடமா நம்ம சாதி நம்ம தலைவருன்னு சொன்னதுமேல் உள்ள உண்மை என்னாச்சு? இப்ப உங்க சாதி வெறி பொய் ஆயிட்டா ஆகுலையா?

அதே நேரத்திலே உங்க சாதி சமயம் எல்லாம் கடந்து அப்பா யாருன்னு தெரியாத என்னை போற்றினீங்க. அது தான் மெய். அது தான் அன்பு. உங்க மேலே நான் வைத்த கருணையும் உண்மை. எல்லாரையும் மனிதநேயமா பார்த்தேன் என் சொத்தை செலவழிச்சேன். இது நாள் வரை பெரியவங்க இந்த பொய் சாதி சமயத்துக்கு கட்டுப்பட்டு இருந்திட்டாங்க. மறந்திடுங்க. நீங்க விழித்திடுங்க. சந்தோசமா வாழுங்க. இயற்கையை நேசிங்க. உண்மை கடவுளின் நிலை காண நல்ல விசாரம் செய்யுங்கள். மன உணர்ச்சியை தூண்டும் கற்பனையான பொய் சாதியையும், முழு உண்மை உரைக்காத பொய் சமயத்தையும் கைவிட்டு, உண்மையை மட்டுமே நம்ப சொல்லும் வள்ளலாரின் சுத்த சன்மார்க்கம் பற்றி தெரிந்துக் கொள்ளுங்கள்.

உழைக்காதவன், அடுத்தவர் வருமானத்தை பறிப்பவன், ஆதிக்கத்தையே செய்ய விரும்பவன் இவர்களால், இவர்களுக்கு மட்டுமே பயன்படும் வகையில், மற்றவர்களை அடிமையாக்கி அவர்களிடம் வேலை வாங்கி எல்லாதுக்கும் மேலே அதிகாரம்

செலுத்த, ஏற்பாடு செய்யப்பட்டதே இந்த சமயங்கள்.

இதை நிலை நிறுத்த இதன் அடிப்படையிலேயே சாதிகள் , பல கடவுள்கள் உருவாக்கப்பட்டது சாதியை நிலைநாட்டவே.

இளைஞர்களே! என் செல்வங்களே!

சாதி சமயம் பொய்னு உங்களுக்கு தெரியப்படுத்தவே இத்தனை வருடம் காத்திருந்தேன். நீங்க பொய்யான சாதி சமய மத மார்க்கங்களிலிருந்து விலகி உண்மை கடவுளை காண ஒழுக்கத்தில் இருக்க வேண்டும். எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க. சாதி சமய மத சண்டை போடுபவன் உண்மை அறிவை பெறாதவன். எல்லாரும் கடவுளின் அம்சமே. நாம் யார்?உண்மை எதுனு? கடவுளிடமே கேட்க நன்முயற்சியில் இருக்க வேண்டும் என உங்கள் அனைவரின் காலில் விழுகிறேன் என்று கீழே விழுந்த எங்கள் அய்யா எழுந்திருக்கவே இல்லை. இளைஞர்கள் கால்கள் மண்டியிட்டன. கைகள் சேர்ந்தன.

அய்யாவின் உடலை மண்ணுக்குள் வைத்து புதைக்கும் போது, அவர்களுக்குள் இருந்த பொய்யான சாதி சமயமும் ஒழிந்து விட்டது என்பது சத்தியம் சத்தியம். -

**- ஏபிஜெ அருள்.**

## வள்ளலார் எதற்காக கடவுளை காண முயற்சித்தார்? அல்லது வள்ளலார் தனது புதிய வழியில் (சுத்த சன்மார்க்கத்தில்) வைத்த விருப்பம் என்ன? - ஏபிஜெ அருள்.

ஆம், இது மிக முக்கியமான பகுதி ஆகும். வள்ளலார் கீழ்வரும் விருப்பத்திற்கே கடவுளை காண வேண்டும் என தீர்மானித்திருந்தார். அதற்காகவே புதிய வழியைக் கண்டார்.

ஆதாரம் 4வது விண்ணப்பம்.

"…. இத்தேகத்திற்கு இடைக்கிடை நேருகின்ற மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் நிவர்த்தி செய்து, இத்தேகத்தையே நித்திய தேகமாக்கிக் கொண்டு, எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எத்துணையும், தடைப்படாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தல் வேண்டும் என்பதே எனது அதி தீவிர விருப்ப முயற்சியாக இருக்கின்றது…."

ஆக, வள்ளலார் வழி (சுத்த சன்மார்க்கம்) என்றாலே சாகாமல் இருக்க ஆசை உள்ளவர்களுக்கு மட்டுமே.

தொடரும்...

நன்றி **ஏபிஜெ அருள்.**

## சித்திரை முதல் நாள், சுத்த சன்மார்க்கத் திருநாள் எங்ஙனம்? - ஏபிஜெ அருள்

ஆம், சித்திரை 1 அன்று (12-04-1871) வள்ளலார் தனது மடல் மூலம் உலகிற்கு சுத்த சன்மார்க்கத்தை வெளிப்படுத்திய நாள். திருவருட்பிரகாச வள்ளலார் திருவருட் திறத்தை பெறுவதற்கு இடைவிடாது கருணை நன்முயற்சியில் பல வருடங்கள் இருந்து ஓர் உண்மை பொது வழியை கண்டார்கள். அவ்வழியில் கடவுள் நிலைக் கண்டு திருவருளால் உண்மையனைத்தும் தெரிந்து, அறிந்து, அனுபவம் பெற்றார்கள். தான் பெற்ற பேரின்ப பெருவாழ்வு மனிதர்கள் அனைவரும் பெற வேண்டும் என்ற ஆன்ம நேய ஒருமைப் பாட்டுரிமையில் திருவருள் சம்மதம் பெற்று மீண்டும் நம்மிடையே வருவிக்கவுற்றவரானார் வள்ளலார்.

தான் கண்ட கடவுள், தன் மார்க்கம் குறித்தும் 12-04-1871 மடல் மூலம் நமக்கு வெளிப்படுத்துகிறார் வள்ளலார்.

சித்திரை 1 அன்று வள்ளலார் உலகத்தார்க்கு அறிவித்த அறிவிப்பு "பெரும்பதி வருகை"

"சுத்தசிவ சன்மார்க்கம் ஒன்றே இனி எல்லாம் உலகத்தும் வழங்கும் இதற்கு எவ்விதப்பட்ட தடைகளும் இல்லை. தடையற்ற பெருநெறி வழக்கம் இக்காலந்தொட்டு அளவிறந்த நெடுங்கால வரையில் வழங்கும். அதன்மேலும் அதன்மேலும் வழங்கும். பலவகைப்பட்ட சமய பேதங்களும், சாத்திர பேதங்களும், ஜாதிபேதங்களும், ஆசாரபேதங்களும் போய், சுத்த சன்மார்க்க பெருநெறி யொழுக்கம் விளங்கும். அது கடவுள் சம்மதம். இது 29 மாதத்திற்கு மேல்.

இப்போது வருகிற நமது கடவுள் இங்கு முன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுளர், தேவர், அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல.

இப்படிச் சொல்லப்பட்ட எல்லா மூர்த்திகளும், எல்லாத்தேவர்களும், எல்லாக்கடவுளரும், எல்லாத் தலைவர்களும், எல்லா யோகிகளும், எல்லா ஞானிகளும் தங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற தனிப்தலைமைப் பெரும்பதி. இது உண்மையாயின் அந்தப் பதியின் அருளை நான் பெறுவேன், பெறுகின்றேன், பெற்றேன்.என்னை யடுத்த தாங்களும் பெறுவதற்கு யாதொரு தடையுமில்லை.பெறுவீர்கள், பெறுகின்றீர்கள், பெற்றீர்கள், அஞ்சவேண்டாம்".

**பிரஜோற்பத்தி சித்திரை-1 - இராமலிங்கம்**

அன்பர்களே!

திருஅருட்பிரகாச வள்ளலார் தனது சத்தியறிவால் அக அனுபவத்தில் கண்ட உண்மையை ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையால் உலகத்தார்களுக்கு மேற்படி அறிவிப்பின் மூலம் வெளிப்படுத்துகிறார்கள்.

நாம் இந்த புனித சித்திரை முதல் நாளை ஓர் "சுத்த சன்மார்க்க இன்ப பெருவிழா"வாக கொண்டாடுவோம்.

அன்பர்களே!

மேற்படி அறிவிப்பில் உள்ள வரிகளை பல முறை வாசியுங்கள்.

அதில் உள்ள முக்கிய வார்த்தைகள் வரிகள்:

1. சுத்தசிவ சன்மார்க்கம் ஒன்றே இனி எல்லாம் உலகத்தும் வழங்கும்.
2. பலவகைப்பட்ட சமய பேதங்களும், சாத்திர பேதங்களும், ஜாதிபேதங்களும், ஆசாரபேதங்களும் போய்,..
3. இது 29 மாதத்திற்கு மேல்.
4. இப்போது வருகிற நமது கடவுள்
5. ....... முதலானவர்களில் ஒருவரல்ல.
6. தனித்தலைமைப் பெரும்பதி
7. அஞ்ச வேண்டாம்.

அன்பர்களே!

மேற்படி 12-4-1871 ல் அறிவிப்பில் உள்ள வரி: " இது 29 மாதத்திற்கு மேல்."

(சரியாக 29 மாத்திற்கு மேல் அதாவது 22-10-1873 அன்று மேட்டுக்குப்பத்தில் வள்ளலார் உரையாற்றும் போது கீழ் வருமாறு குறிப்பிட்டுச் சொல்கிறார்கள்:

" இரண்டரை வருடமாக நான் சொல்லிக் கொண்டு வந்தேன்."

கடவுள் நிலை காண ஒவ்வொருவரும் அவரவர் ஒழுக்கம், அறிவு கொண்டு இது குறித்து நல்ல விசாரனைச் செய்ய வேண்டும். ஆனால் 22.10.1973ல் வள்ளலார் சொன்னது:

"உண்மை சொல்ல வந்தனனே என்று உண்மை சொல்லப் புகுந்தாலும் தெரிந்து கொள்வாரில்லை"

**- உங்கள்: ஏபிஜெ அருள்.**

## வள்ளலாரின் "சமரச சுத்தசன்மார்க்கம்" 19ம் நூற்றாண்டில் தோன்றிய ஒரு புதிய தனி மார்க்கம் என விளம்புகை செய்ய கோரிக்கை.

பெறுநர்:

1. உயர்திரு முதன்மை செயலாளர் அவர்கள்,
 தமிழக அரசு, சென்னை - 600 009
2. உயர்திரு செயலாளர் அவர்கள்,
 இ. ச. அ.ஆ.துறை சுற்றுலா துறை
 தமிழக அரசு, சென்னை - 600 009
3. உயர்திரு முதலமைச்சர் தனிப்பிரிவு,
 தமிழக அரசு, சென்னை - 600 009

மதிப்பிற்குரிய அய்யா / அம்மா,

1. திருஅருட்பிரகாச வள்ளலார் 19ம் நூற்றாண்டில் ஒரு புதிய தனி மார்க்கத்தை கண்டு வெளிப்படுத்தினார்கள். அம்மார்க்கத்தின் பெயர் "சமரச சுத்த சன்மார்க்கம்" எனப்படும்.
2. சுத்தசன்மார்க்கத்தின் கடவுள் கொள்கை, அக்கடவுளின் அருள் பெறும் சாதனம், அக்கடவுளின் அருளால் கிடைக்கும் பலன், இவை அனைத்தும் புதியவழியிலும், தனி நெறியிலும் உள்ளது.
3. வள்ளலார் கண்ட சுத்தசன்மார்க்கம் உலகில் காணப்படும் சமய மத மார்க்கத்திற்கு கீழ் அல்லது அவை கிளையோ அல்ல. இது புதிய மற்றும் தனி தன்மை கொண்டது.
4. மேலும், உலகில் காணப்படும் சாதி சமய மத மார்க்கங்களையும் அதன் ஆசாரங்களையும் உலகாசாரங்களையும் தன் மார்க்கத்திற்கு எக்காலத்துக்கும் முக்கியத் தடையாக அறிவிக்கிறார் வள்ளலார். அதே நேரத்தில் எல்லா சமயமத மார்க்கங்களுக்கும் சமரச சுத்தசன்மார்க்கம் உண்மை பொது நெறியாக விளங்குகிறது என்கிறார் வள்ளலார்.
5. தான் கண்ட மார்க்கத்திற்கு:

 "தனி கொடி", "தனி சங்கம்", "சபை-சாலை", "விதிகள்-கொள்கைகள்", "கட்டளைகள்-அறிவிப்புகள்", "தனிப்பாடல்கள்","தனிசாதனம்", "மகாமந்திரம்","உபதேசம்-விண்ணப்பங்கள்".முறைகள்", "நிலையங்கள், நிலங்கள்" முதலிய அனைத்தும் ஏற்படுத்தியுள்ளார்கள். (மேலே சொல்லப்பட்ட அனைத்திற்கும் உரிய ஆதார ஆவண நகல்கள் இங்கு இணைக்கப்பட்டுள்ளது.)
6. வள்ளலாரின் சுத்தசன்மார்க்கத்தில் கடவுளின் அருளால் மரணம் தவிர்க்கலாம் என்ற "சாகாகல்வி" பற்றி சொல்கிறது.
7. மேலும் வள்ளலாரின் சுத்தசன்மார்க்கம் மற்றும் அதன் நெறி ஒரு தனி நெறி என இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை துணை, இணை, மற்றும் ஆணையர் அவர்களால் அவர்களின் பல ஆணைகள் மூலம் வெளிபடுத்தப்பட்டுள்ளது. (நகல்கள் இணைக்கப்பட்டுள்ளது). மேதகு

உயர்நீதிமன்றம், சென்னை நேரிடையாக சில வழக்குகளில் வள்ளலாரின் சுத்த சன்மார்க்கம் சமயமதம் சாராத கொள்கை கொண்டு விளங்குகிறது என தீர்ப்பு வழங்கி உள்ளது. மேலும், மற்றொரு வழக்கில் மிகத்தெளிவாகவே மேதகு உயர்நீதிமன்றம், சென்னை, வள்ளலாரின் சுத்த சன்மார்க்கம் தனி கொள்கை கொண்டது என கூர் நோக்கி குறிப்புகள் கொடுக்கப்பட்டு அவ்வழக்கின் பிரச்சனைக்கு தீர்வு வழங்கி உள்ளது. (நகல்கள் இணைக்கப்பட்டுள்ளது.)

7. மேலும் இந்திய அரசமைப்பு சட்டத்தின் படி ஒன்றை தனி சமயமாக (மார்க்கமாக) அறிவிக்க வேண்டுமெனில் சொல்லப்பட்டுள்ள அனைத்து தகுதிகளையும் வள்ளலாரின் சுத்த சன்மார்க்கம் பெற்றுள்ளது.

**இந்நிலையில் தங்களிடம் பணிவுடன் வேண்டுவது**

1) வள்ளலாரின் சமரச சுத்தசன்மார்க்கம் ஒரு புதிய மார்க்கம் எனவும், அதன் நெறி தனி நெறி எனவும் விளம்புகை செய்ய வேண்டுகிறோம்.

2) வள்ளலாரின் சமரச சுத்தசன்மார்க்கம் தழுபவர்கள் தாங்கள் சுத்தசன்மார்க்கம் சார்ந்தவர்கள் என அழைத்திட, எழுதிட சட்டப்படி உரிமை வழங்கிட வேண்டுகிறோம்.

3) மேற்படியான கோரிக்கைகள் ஏற்று சட்டம் வடிவம் கிடைத்திட உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தாங்கள் பரிசீலித்து கோரிக்கைகளை மேதகு மத்திய அரசுக்கு பரிந்துரை உடனே செய்ய வேண்டுகிறோம்.

இங்ஙனம்::

**ஏபிஜெ. அருள். கருணை சபை**

**சகாதேவராஜா, சசாங்கன், சுப்பிரமணியன். செங்கான், சந்திரமோகன், ரவிசந்திரன், ஹரிகோவிந்தன், பாலமுருகன், கண்ணன், தனசேகரன், சொக்கலிங்கம், ராமசாமி.**

**(குறிப்பு:**

மேதகு கர்நாடக அரசு அம்மாநிலத்தில் தோன்றிய "லிங்காயத்" அமைப்பை தனி மதமாக அறிவித்திட அவ்வரசு மத்திய அரசுக்கு பரிந்துரை அனுப்பியுள்ளது. அதுபோல்

வள்ளலாரின் சுத்தசன்மார்க்கம் ஒரு புதிய மார்க்கம் எனவும், அதன் நெறி தனி நெறி எனவும் விளம்புகை செய்ய தமிழக அரசு ஏற்று மத்திய அரசுக்கு பரிந்துரைக்க வேண்டுகிறோம்).

அனைத்து சுத்த சன்மார்க்கத்தார்கள் தனியாகவும், அமைப்பு மூலமாகவும், மேற்படிப்பு கோரிக்கையை மேதகு அரசுக்கு அனுப்பி வைத்து வேண்டலாம். அறவழியில் பணிவாக உரிமையுடன் கோரிக்கையை அனுப்பலாம்.

**நன்றி. ஏபிஜெ. அருள்**